<u>சுருக்கம்</u>

சிறுபான்மையினர் நலன் – சென்னை முஸ்லிம் மகளிர் உதவிச் சங்கம் – 2019–2020–ஆம் ஆண்டிற்கான அரசின் இணை மானியம் ரூ.20,00,000/–ஐ ஒப்பளிப்பு செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

<u>பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல (எஸ்1)த் துறை</u>

அரசாணை (ப) எண். 47

நாள் 16.06.2021
பிலவ, ஆனி 02
திருவள்ளுவர் ஆண்டு 2052

படிக்கப்பட்டது :–

1 அரசாணை (நிலை) எண்.77, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல(எஸ்1)த் துறை, நாள் 11.12.2001.

2 அரசாணை (நிலை) எண்.08, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்(எஸ்1) துறை, நாள் 12.01.2016.

3 அரசாணை (ப) எண்.75, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல(எஸ்1)த் துறை, நாள் 24.09.2020.

4 சென்னை முஸ்லிம் மகளிர் உதவி நலச் சங்கத்தின் தலைவர் மற்றும் சென்னை மாவட்ட ஆட்சியரின் கடிதம் எண்.MWAS/10/2020, நாள் 05.11.2020.

******

<u>ஆணை:-</u>

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், சென்னை முஸ்லிம் மகளிர் உதவிச் சங்கத்திற்கு அச்சங்கம் வசூலிக்கும் மொத்தத் தொகைக்கு இணையான தொகையினை அரசு மானியமாக வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், 2013–2014ஆம் ஆண்டு முதல் சென்னை முஸ்லிம் மகளிர் உதவிச் சங்கம் திரட்டும் நிதி ஆதாரத்திற்கேற்ப இணை மானியத் தொகையை இரு மடங்காக உயர்த்தியும், உச்ச வரம்பை ரூ.10.00 இலட்சத்திலிருந்து ரூ.20.00 இலட்சமாக உயர்த்தியும், 2013–2014ஆம் ஆண்டிற்கான அரசின் இருமடங்கு மானியமாக ரூ.8,28,652/–ஐ ஒப்பளிப்பு செய்தும் ஆணைகள் வெளியிடப்பட்டது.

3. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், சென்னை முஸ்லிம் மகளிர் உதவிச் சங்கம் திரட்டிய நிதி ஆதாரத்திற்கேற்ப 2017–2018ஆம் ஆண்டிற்கான அரசின் இருமடங்கு மானியமாக ரூ.13,33,400/–ஐ ஒப்பளிப்பு செய்து ஆணைகள் வெளியிடப்பட்டது.

4. மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், முஸ்லிம் மகளிர் உதவிச் சங்கத்தின் தலைவர் மற்றும் சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்கள் அரசாணை (நிலை) எண்.109, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்(ட்டி1)துறை, நாள் 08.10.2012ன்படி, 2019–20ஆம் ஆண்டில் முஸ்லிம் மகளிர் உதவிச் சங்கம் வசூல் செய்த நன்கொடைத் தொகை ரூ.10,34,700/–க்கு இணையான அரசின் இரட்டிப்பு மானியத் தொகை 1:2 என்ற விகிதாச்சாரத்தின்படி, ரூ. 20,00,000/–த்தினை மானியமாக வழங்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

5. சென்னை முஸ்லிம் மகளிர் உதவிச் சங்கத்தின் தலைவர் மற்றும் சென்னை மாவட்ட ஆட்சியரின் கருத்துருவினை அரசு நன்கு கவனமுடன் பரிசீலனை செய்து, 2019–2020ஆம் ஆண்டில் முஸ்லிம் மகளிர் உதவிச் சங்கம் வசூல் செய்த நன்கொடைத் தொகை ரூ.10,34,700/–க்கு இணையான அரசின் இரட்டிப்பு மானியத் தொகை 1:2 என்ற விகிதாச்சாரத்தின்படி, உச்சபட்ச தொகைக்குட்பட்டு ரூ. 20,00,000/–த்தை (ரூபாய் இருபது இலட்சம் மட்டும்) மானியமாக ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

6. மேலே பத்தி 5-ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை, கீழ்க்காணும் கணக்கு தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும் :

"2235 Social Security and Welfare – 60 – other social security and welfare programmes – 200 – other programmes, State's Expenditure – AJ – Assistance to Muslim Gosha Women Aid Society – 309 – Grants-in-Aid – 01 – Grants for current Expenditure"

(Old DPC 2235 60 200 AJ 0910)
(IFHRMS DPC 2235 60 200 AJ 30901)

7. மேலே பத்தி 5–இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை IFHRMS வழிமுறையைப் பின்பற்றி, சரிகட்டுபட்டி (Adjustment Bill) மூலம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் எதிர் வரவு (contra credit) வைக்கப்பட வேண்டும் :

"K. Deposit and Advances – (b) Deposits not bearing interest – 8443 00 Civil Deposits – 106 Personal Deposits – AC Personal Deposits – Fund deposited from other sources, other than consolidated Fund – 801 – Receipts 02 – Not bearing interest"

(Old DPC 8443 00 106 AC 000J)
(IFHRMS DPC 8443 00 106 AC 80102)

8. மேலே பத்தி 5–இல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள செலவினத்தை மேற்கொள்ள தேவையான கூடுதல் நிதியொதுக்கம் ரூ.19,00,000/–, 2021–2022 ஆம் ஆண்டிற்கான திருத்திய வரவு செலவு திட்ட மதிப்பீடு/திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இருப்பினும், மேற்கண்ட செலவினத்திற்கு 2021–2022 ஆம் நிதியாண்டிற்கான துணை மானியக் கோரிக்கையில் கொணர்ந்து

சட்டமன்றப் பேரவையில் ஒப்புதல் பின்னர் பெறப்படும். இந்நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி மேலே பத்தி 5–ல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினை பெற்று, தன்வைப்பு கணக்கில் வரவு வைக்க பிரிவு அலுவலர் (பட்டியல்), பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மேலும் பத்தி 5–ல் ஒப்பளிக்கப்பட்ட இக்கூடுதல் செலவினத்திற்கான உரிய கருத்துருவை 2021–2022 ஆம் ஆண்டிற்கான திருத்திய வரவு செலவு திட்ட மதிப்பீடு/திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு தவறாது உரிய நேரத்தில் நிதி (பி.மி.பி) துறைக்கு அனுப்பி வைக்குமாறு பிரிவு அலுவலர் (பட்டியல்), பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

9. மேலும் சென்னை முஸ்லிம் மகளிர் உதவிச் சங்கத்தால் திரட்டப்பட்ட நிதி மற்றும் அரசு மானியம் ஆகியவற்றை இஸ்லாமிய மகளிர் நலத் திட்டங்களுக்குப் பயன்படுத்தியதற்கான பயன்பாட்டுச் சான்றிதழை சிறுபான்மையினர் நலத் துறை இயக்குநருக்கு அளிக்குமாறு சென்னை மாவட்ட ஆட்சியர் மற்றும் முஸ்லிம் மகளிர் உதவிச் சங்கத் தலைவர் அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்.

10. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.20709/நிதி(பி.மி.பி.)/ 2021, நாள். 24.05.2021–ல் பெறப்பட்ட இசைவுடனும், கூடுதல் நிதியொதுக்கப் பேரேட்டு எண். 93 (தொண்ணூற்று மூன்று) உடனும் வெளியிடப்படுகிறது.

//ஆளுநரின் ஆணைப்படி//

ஆ.கார்த்திக்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
பிரிவு அலுவலர் (பட்டியல்),
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நலத் துறை, சென்னை–9.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–9.
தலைவர்,
முஸ்லிம் மகளிர் உதவிச் சங்கம் மற்றும் சென்னை மாவட்ட ஆட்சியர்,
சென்னை–1.
சம்பளம் (ம) கணக்கு அலுவலகம் (வடக்கு), சென்னை –1.
உதவி இயக்குநர், நகர தணிக்கை, சென்னை–3.
மாநிலக் கணக்காயர், சென்னை–6 & 18
சிறுபான்மையினர் நல இயக்குநர், சென்னை–5.
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்,
சென்னை–2.

<u>நகல் :-</u>

மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை – 9.

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை முதன்மைச் செயலாளர் அவர்களின் முதுநிலை தனிச் செயலர், சென்னை–9.

முதன்மை செயல் அலுவலர், தமிழ்நாடு வக்ஃபு வாரியம், சென்னை–1

நிதித் (பி,மி,பி/வரவு–செலவு (பொது – 1 &2)) துறை, சென்னை– 9

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல (பிந3)த் துறை, சென்னை–9.

இருப்புக் கோப்பு / உதிரி.

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

16/6/2021

பிரிவு அலுவலர்

16/6/2021